


## வாரத்தில் ஓர் முத்து!

16 பெப்ரவரி 2010 | சகரியா பூணன்

# 42. சிலுவைப் பயணம் ஓர் அன்பின் பயணம்!

"நேசம் (அன்பு) மரணத்தைப் **போல்** வலிது!" (உன்னதபாட்டு 8:6) என்றே வேதம் கூறுகிறது. அதாவது, மரணம் எந்த மனிதனையும் தப்பவிடாமல் யாவர்மீதும் சம்பவிப்பது போலவே, தேவ அன்பும் ஒருவர் பாக்கி இல்லாமல் மனுவர்க்கத்தின் எல்லோரையும் நேசிக்கிறது. ஆனால், இப்போதோ புதிய உடன்படிக்கையில் இயேசு மரணத்தையே ஜெயித்து விட்டார். எனவே, இப்போது நாம் "திவ்ய அன்பு மரணத்தைக் **காட்டிலும்** வலிது!!" என நாம் கூறிட முடியும். இயேசுவின் இப்பூலோக வாழ்க்கையில் அவர் வெளிப்படுத்திய தேவ அன்பை எவ்வித கொடிய வெறுப்பும் கசப்பும்; அல்லது ஆவிக்குரிய மரணத்தைக் கொண்டுவரும் எவ்வித கொடிய பாவ விஷமும் அந்த அன்பை மேற்கொள்ள முடியவில்லை! இருளில் உதித்த இந்த தேவ அன்பின் வெளிச்சத்தை இருளானது பற்றிக்கொள்ள முடியவில்லை. ஆம், மாம்சம் ஜெயிக்கப்பட்டது...... ஏனெனில், அது **தொடர்ச்சியாய் சிலுவையில்** அறையப்பட்டு விட்டது! "இப்போது" நாம் எல்லோரையும் திவ்ய அன்பினால் அன்புகூர்ந்துவிட முடியும்!

இவ்வொப்பற்ற தெய்வ அன்பு தன்னில் குறைவுபடுவதைக் கண்டு, என்ன கிரயமானாலும் அவ்வன்பைப் பெறுவதற்கு கூக்குரலிட்டு கதறுபவனே மாம்சத்தின் வழியாய் செல்லும் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தின் வெளிப்பாட்டை பெற்றவன்!

இன்று அனேக விசுவாசிகள், குறிப்பாய் பரிசுத்தத்தைப் பிரசங்கிக்கும் பிரசங்கிகளிடம்கூட, அவர்களின் அன்பு தங்கள் குழுவினருக்குள் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாய் இருக்கிறது. இவர்கள் ஒருவேளை தங்கள் குழுவினரைப்பற்றி தீமையாகப் பேசாமல் இருக்கலாம். ஆனால் மற்ற விசுவாசிகளைப் பற்றி தீமையாய் பேசவோ, தீமையானவைகளைக் கேட்கவோ செய்கிறார்கள்! இந்நிலை உங்கள் வாழ்க்கையில் காணப்படுகிறதா? என்பதை சற்றே ஆராய்ந்து பாருங்கள்.

இவர்கள் பெற்றிருக்கும் அன்பெல்லாம் மனுஷீக அன்பே அல்லாமல் தெய்வீக அன்பு அல்லவே அல்ல! ஆனால் இயேசுவோ நம்மைப் பிதாவைப்போல் நல்லவர்களாகவும் அன்புள்ளவர்களாகவும் மாற்றவே வந்தார்!

தமிழ் வடிவம் : T. ரத்தினகுமார்

© Zac Poonen ( 2009 )